# சார்பு நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்

## OS.No.125/2023

## பிரதிவாதி தரப்பு சாட்சி– 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னகண்ணு | கணவர் பெயர் | : | முருகன் |
| கிராமம் | : | கௌாப்பாறை | வட்டம் | : | அரூர் |
| தொழில் | : | --- | வயது | : | 76 |

Solemnly affirmed/sworn by **Bench Clerk GII,** in accordance with the provisions of Act of 1873, on this the 04th day of August 2026

DW-3

பிரதிவாதி தரப்பு சாட்சியம் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

தாவாவில் நான் 3ம் நபர் ஆவேன். எனது முதல் விசாரணையை விரிவாக துவக்கி சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை என் முதல் விசாரணையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் இருக்கும் சங்கதிகள் சரியானவை. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம்தான்.

ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதிகள் செல்வராணி, வசந்தா, சுமதி, 1ம் பிரதிவாதி கதிரவன் ஆகியோருக்கு நான் தாயார் என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். ஆனால் நான் கையெழுத்து மட்டும் செய்வேன் என்றால் சரிதான். எனது மகள்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில் கண்டுள்ள சொத்து யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் எனது மகனுக்கு பாத்தியப்பட்ட சொத்து. கதிரவனுக்கு சொத்து வருவதற்கு முன்பு அது யார் பெயரில் இருந்தது என்றால் என் பெயரில் இருந்தது அதனை எனது மகன்

கதிரவன் பெயருக்கு மாற்றிவிட்டேன். எனது கணவர் பெயர் முருகன் என்றால் சரிதான். அவர் பெயரில் தாவா சொத்து தவிர இதர சொத்து இருந்தது என்றால் இல்லை.

2. எனது கணவர் முருகனுக்கு இருந்த சொத்தை பொறுத்து எனது மகள்கள் 3 பேரும் 18.04.2012 ம் தேதி ஒரு விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்து அதன்படி எனது மகன் கதிரவனுக்கு அந்த சொத்தை கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் இல்லை. 18.04.2012–ல் பதிவு செய்த விடுதலைப்பத்திரத்தில் நான்தான் அதில் சாட்சிகையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதேதேதியான 18.04.2012–ம் தேதியில் எனது மகன் கதிரவனுக்கு இருந்த சொத்துக்களை எனது மகள்கள் செல்வராணி, வசந்தா, சுமதி ஆகியோருக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்திலும் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதற்கு ஒரே நாளில் மேற்படி 2 ஆவணங்களும் ஏற்படுத்தப்பட்டது என்றால் எனது மகள்கள் சொத்தில் பங்கு கேட்டார்கள் அதற்காக எனது மகன் அந்த சொத்தை எனது மகளுக்கு எழுதிவைத்தார்.

3. அவ்வாறு எனது மகன் எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் ஏதாவது நிபந்தனைகள் விதித்திருந்தாரா என்றால் இல்லை. அவ்வாறு நிபந்தனைகள் எதுவும் விதிக்காத சமயத்தில் எதற்காக தனசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்த அடுத்தநாளே 19.04.2012 ல்

எனது மகன் கதிரவன் எனது மகள்களுக்கு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்தார் என்றால் எனது மருமகள் கவிதாவிற்கும், எனது மகன் கதிரவனுக்கும் சண்டை வந்தது அதனால் எனது மகள்களுக்கு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டார். அவ்வாறு தானசெட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட்ட ஆவணத்திலும் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது மகள்களின் ஒப்புதலோடுதான் அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டதா என்றால் ஆமாம். அவ்வாறு ரத்து செய்யப்பட்ட ஆவணத்தில் எனது மகள்கள் ஏதாவது கையெழுத்து செய்தார்களா என்றால் இல்லை. அவ்வாறு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எனது மகன் ரத்து செய்யும் முன்பு எனது மகள்களுக்கு அந்த ஆவணத்தை ரத்து செய்வது குறித்து அறிவிப்பு ஏதாவது அனுப்பினாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. அவ்வாறு ரத்து செய்யும்போது சார்பதிவாளர் எனது மகள்களை அழைத்து ரத்து ஆவணம் பதிவு செய்வதில் ஆட்சேபனை உள்ளதா என்று ஏதாவது கேட்டாரா என்றால் அது குறித்து எதுவும் எனக்கு தெரியவில்லை. எனது மகன் கதிரவன் எனது மகள்களுக்கு தெரியாமல் மோசடியாக ரத்து ஆவணத்தை பதிவு செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் முருகன் பெயரில் இருந்த சொத்துக்களில் எனது மகள்கள் பாகம் கேட்டார்கள் அதற்காக எனது மகன் பெயரில் இருந்து சொத்தை எனது மகள்களுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்தார் அதேசமயத்தில் எனது மகள்கள் மூவரும் எனது கணவர் பெயரில் இருந்த

சொத்துக்களை பொறுத்து எனது மகனுக்கு பாகபாத்திய விடுதலைப்பத்திரம் எழுதிவைத்தார்கள் என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் ரத்து ஆவணம் தயார்செய்து பதிவு செய்த பிறகு அதில் கண்டுள்ள சொத்துக்களை எனது மகன் கதிரவன் 4 மாதம் கழித்து எனது மருமகள் கவிதா பெயருக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் சரிதான். எனது மகன் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி எனது மகள்கள் மூவருக்கும் சொத்தை பொறுத்து பாத்தியம் உண்டு என்று சொன்னால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.08.04 17:31:20 +0530